அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அது வந்ததற்குப் பிறகு இறுதி முடிவு எடுக்கப்படும்.

திரு. ஏ. எம். இராமசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நடப்பாண்டில் அதைக் கட்டித் தரவேண்டுமென்று மீண்டும் அவரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

(விடை இல்லை).

மறுவாழ்வு இல்லங்கள்.

*2651—திரு. வீ. தமிழ்மணி:—

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

தமிழ்நாட்டில் உள்ள உடல் ஊனமுற்றவர், பார்வையற்றவர்கள், மனநோயாளிகளுக்குத் தனித்தனியாக மறுவாழ்வு இல்லங்கள் அமைத்து ஆதரவளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே :

தற்போது அரசின் பரிசீலனையில் அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றோர், பார்வையற்றோர், மனநோயாளிகளுக்கு ஆங்காங்கே இருக்கின்ற சத்துணவு மையங்களிலாவது மதிய உணவு வழங்கப்படுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக நிலையங்கள் உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்று நான் சொன்னேன். ஏற்கெனவே பார்வையற்றவர்கள், காது கேளாதோர், மன வளர்ச்சி குன்றியவர்களைப் பராமரிக்கின்ற வகையில், அவர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்குகின்ற பயிற்சி நிலையங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த நிலையங்களில் பார்வையற்ற பெண்கள், பார்வையற்ற ஆடவர்கள், உடல் ஊனமுற்ற ஆடவர்கள் போன்றவர்கள் 6 மாதம் முதல் ஓராண்டு வரை தங்கி சிறிய தொழில் பயிற்சியினைப் பெற்று அதன்மூலம் வேலை வாய்ப்பைப் பெறு

1990 சனவரி 25]

இறார்கள். இது தவிர 5 இடங்களில் ஆதரவற்ற பெண்களைத் தொடர்ந்து பராமரிக்கக் கூடிய மகளிர் காப்பகங்களும் தமிழகத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. எனவே அவர்களுக்கு எல்லாம் சத்துணவுக் கூடங்களில் ஆதரவு தரவேண்டிய அவசியம் தற்போது இல்லை.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக ஆரம்பிக்கவில்லையானாலும் ஆங்காங்கே இருக்கின்ற இப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் அரசு வழங்குகின்ற உதவித் தொகைக்கு சில விதிகள் நிர்ணயிக்கப்கப்பட்டிருக்கின்றன. அந்த விதிகளையெல்லாம் தளர்த்தி அவர்களுக்கு வயது வரம்பு என்று பார்க்காமல் உதவித் தொகை வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, சில விதிகளுக்கு உட்பட்டு அரசினுடைய உதவித் தொகை வழங்கப்படுமேயானால்தான் யாருக்கு அந்த உதவித் தொகை போய்ச் சேர வேண்டுமோ, அவர்களை அந்த உதவித் தொகை சென்று அடையும். விதிகளே இல்லாமல் வழங்குவது என்றால் முழுவதுமாக உடல் ஊனமுற்றவர்கள் அல்லாதவர்கள்கூட, சிறு ஊனமுற்றவர்கள்கூட, இந்த உதவித் தொகையைப் பெறுவதில் போட்டியிடுவதன் காரணமாக உண்மையிலேயே யாருக்கு அரசினுடைய உதவி தேவையோ, அவர்களைப் போய்ச் சேராது என்ற காரணத்தினால்தான், சில விதிகளை வகுத்து, அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டவர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவள்ளூர் தொகுதியில் தொழில் தொடங்குதல்

*3127—திரு. எஸ். ஆர். முனிரத்தினம் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவள்ளூர் தொகுதியில் கூட்டுறவுத் துறை மூலம் தொழில் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : : தலைவர் அவர்களே, ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். ஆர். முனிரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அரசின் பரிசீலனையில் உள்ள தொழிற்